# ஹக்மன பிரதேச சபை

# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜுலை 13 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 செப்டம்பர் 26 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவெம்பர் 28 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய ஹக்மன பிரதேச சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹக்மன பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

இருபது கணக்கீட்டு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம், மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 157,419,918 ஆகும். உப பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 151,262,912 ஆகும். இதனால் ரூபா 6,157,006 வித்தியாசம் ஏற்பட்டது.

### 1.3.2 தொங்கற் கணக்கு

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிசார் கூற்றுக்களில் காணப்படும் தொங்கற் கணக்கின் வரவு மீதியான ரூபா 415,502 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

சான்றுகள் இன்மையால் ரூபா 214,763,332 க்கான 8 கணக்கீட்டு விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி, மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 626,428 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 418,126 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 414 | 402 | 880 |
| (ii) | குத்தகை வாடகை | 3,989 | 3,976 | 701 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 565 | 667 | 4 |
| (iv) | பிற வருவாய் | 4,223 | 6,934 | 103,044 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபைத் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 888,620 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 630,395 |

### 2.2.3 தீர்வையும் வரியும்

சபையின் 590 சொத்துக்கள் தொடர்பாக நிலுவையாக உள்ள தீர்வையும் வரியும் ரூபா 748,793 ஆகும். இதனை அறவிடுவதற்கான பொறுப்பு சபையின் வருவாய் கட்டுப்பாட்டாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 297 சொத்துக்களிலிருந்து ரூபா 361,392 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அறவீடு 48% ஆக அமைந்திருந்தது.

### 2.2.4 கடை வாடகை

(i) மீளாய்வாண்டு முடிவில் ரூபா 480,670 கடை வாடகை நிலுவையாக இருந்தது.

(ii) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 டிசெம்பர் 27 ஆந் திகதிய தெ.உ / உ.ஆ / 2010/01 இலக்கச் சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளுக்கமைய கடைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.5 நீர்க்கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டு முடிவில் ரூபா 2,000 க்கு மேற்பட்ட நிலுவையைக் கொண்ட 139 நீர்ப்பாவனையாளர்கள் இருந்தனர். அவர்களிடமிருந்து ரூபா 920,642 அறவிடப்பட வேண்டியிருந்தது. இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நீர்மானி செயலற்றுப் போனமையால் சாதாரண கட்டணத்தை அறவிடும் நீர் நுகர்வோர்களது எண்ணிக்கை 154 ஆகியது. அந்த இடங்களில் மீளாய்வாண்டு முடிவில் ரூபா 162,909 நிலுவையாக இருந்தது.

(இ) நீர்மாணி செயலற்றிருந்த இடங்களில் பொருத்துவதற்காக ரூபா 34,400 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 22 மானிகள் பொருத்தப்படாது களஞ்சியத்தில் இருந்தன.

## 2.3 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டின்போது மகநெகும மற்றும் மாகாண சபை அங்கத்தவர் நிதியேற்பாடு என்பவற்றின் கீழ் 17 நிர்மாண வேலைகளுக்குப் பெறப்பட்ட ரூபா 7,765,000 பயன்படுத்தப்படவில்லை.

## 2.4 அங்கத்தவர்களது பங்களிப்பு

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது சபையின் 9 கூட்டத்தொடர்கள் நடைபெற்றதுடன் அந்த 9 கூட்டத் தொடர்களிலும் 6 அங்கத்தவர்கள் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர். ஏனைய அங்கத்தவர்கள் இடைக்கிடையே பங்குபற்றியிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் அங்கத்தவர்களது யோசனைகள் உள்ளடக்கப்பட்ட, செய்யவேண்டிய வேலைகளின் விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) கூட்டத் தொடர்களிலும் தொழிற்படு கூட்டங்களிலும் பங்குபற்றாமலும் மருத்துவச் சான்றிதழை வழங்கி லீவை அங்கீகரிக்காதுமிருந்த 2 அங்கத்தவர்களுக்கு தென் மாகாண முதல் அமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினது 2005 ஒக்டோபர் 05 ஆந் திகதிய 1413/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் 3.1(1) விதிக்கு முரணாக ரூபா 10,000 படியாக வழங்கப்பட்டிருந்தது.

## 2.5 வீதி விளக்குப் பராமரிப்பு

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

i. சபையின் அதிகாரதிற்குட்பட்ட பிரதேசத்தில் பொருத்தப்படும் மின் விளக்குகள் தொடர்பாக விரிவான பதிவேடொன்று பேணப்படவில்லை.

ii. சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் இலங்கை மின்சார சபை அங்கீகரித்திருந்த வீதி விளக்குகளின் எண்ணிக்கை 102 ஆகும். எனினும், 393 வீதி விளக்குகள் பராமரிக்கப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டினது அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகளுக்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து ரூபா 22,272 மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்தது.

**2.6 மனிதவள முகாமைத்துவம்**

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 36 ஆகும். உள்ளபடியான பதவியணியினர் 65 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டில் பதவியணியினர் சம்பளம் மற்றும் அங்கத்தவர்கள் படிக்கான செலவினம் ரூபா 13,851,361 ஆகும். எனினும், உள்ளூராட்சி ஆணையாளர் மீளளிப்புச் செய்த தொகை ரூபா 8,415,320 மாத்திரமேயானதால் ரூபா 5,436,041 வித்தியாசம் ஏற்பட்டது.

**2.7 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

(அ) 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கும் காலம் தொடர்பான ஒன்றினைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 3,891,577 ஆகும்.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்